செய்தி வெளியீடு எண் : 1002 நாள் : 19.07.2024

## செய்தி வெளியீடு

# நாமக்கல் கவிஞர் அவர்களுக்கு 1945–ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வெள்ளிப் பேழை மற்றும் வாழ்த்துப் பட்டயத்தை புதிதாக அமையவுள்ள சுதந்திர தின அருங்காட்சியகத்திற்கு நாமக்கல் கவிஞர் அவர்களின் பேரன் முனைவர் இரா.அ. பழனியப்பன் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. தங்கம்தென்னரசு அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களிடம் வழங்கினார்

மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. தங்கம்தென்னரசு அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சுவாமிநாதன் அவர்களிடம் 18.07.2024 அன்று, நாமக்கல் கவிஞர் அவர்களுக்கு 1945–ஆம் அண்டு வழங்கப்பட்ட வெள்ளிப் பேழை மற்றும் வாழ்த்துப் பட்டயத்தை புதிதாக அமையவுள்ள தமிழ்நாடு அரசின் சுதந்திர தின அருங்காட்சியகத்திற்கு நாமக்கல் கவிஞர் அவர்களின் பேரன் முனைவர் இரா.அ. பழனியப்பன் அவர்கள் வழங்கினார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் 260 ஆண்டு கால தொடர் பங்களிப்பு குறித்து, எதிர்கால இளம் சமுதாயம் அறிந்து கொள்ளும் வகையில், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய சுதந்திர தின அருங்காட்சியகம் சென்னையில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.08.2022 அன்று 75–ஆவது சுதந்திர தின விழா உரையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை மெரினா கடற்கரையின் எதிரில், பாரம்பரியக் கட்டடமான ஹுமாயூன் மஹால் கட்டடத்தில் சுமார் 80,000 சதுர அடி பரப்பளவில் பெரிய அளவில் இச்சுதந்திர தின அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.

ஜான்சிராணி ஆயுதமேந்தி போரிடுவதற்கு அரை நூற்றாண்டு முன்பாகவே தமிழகத்தில் வீரமங்கை வேலுநாச்சியார் விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று நடத்தினார்கள். தாய் திருநாட்டிற்காக தங்கள் இன்னுயிரை ஈந்த சுதந்திரப்போராட்ட வீரர்கள் தமிழ் மண்ணில் தோன்றிக் கொண்டே இருந்தனர். அவர்களுள் செக்கிழுத்த

செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், ஆங்கிலேயரக்கு எதிராக கடுமையாக போராடினார். அதற்கு பரிசாக அவருக்கு கடும் சிறைத் தண்டனை கிடைத்தது. பாரதியார் தனது இனிய தமிழ் பாடல்கள் மூலம் சுதந்திர உணர்வை தட்டி எழுப்பினார். மகாத்மா காந்தி அவர்களின் வருகைக்குப் பின்னால் தமிழகத்தில் சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்தது. மூலை முடுக்கெல்லாம் விடுதலைத் தீ பரவியது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்கள் "கத்தியின்றி ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகிறது" என்ற பாடலை பாடி தேசியத்தையும், காந்தியத்தையும் போற்றினார்கள். அது தான் உப்பு சத்தியாகிரகத்திற்கு எழுச்சிப் பாடலாக இருந்தது. மகாத்மா காந்தி அவர்களின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அறப்போராட்டத்தால் மட்டுமே நாடு விடுதலையைப் பெற முடியும் என்று உறுதியாக நம்பினார். இவரது கவிதைகள் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றியும் அகிம்சையை பற்றியும் வலியுறுத்தியதால் இவர் காந்தியக் கவிஞர் என அழைக்கப்பட்டார்.

இவ்வாறு பாடுபட்டு பெற்ற சுதந்திரம் பற்றிய வரலாற்றை இன்றைய இளம் தலைமுறை அறிந்து கொள்ளும் வகையில் இந்த சுதந்திர தின அருங்காட்சியகத்தில், சுதந்திரப் போராட்டம் குறித்த பழங்கால ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள், செய்தித் தாள்கள், ஜெயில் வில்லைகள், இராட்டைகள், பட்டயங்கள், ஐ.என்.ஏ.சீருடைகள், ஐ.என்.ஏ. அஞ்சல் தலை மற்றும் ரூபாய் நோட்டுகள் போன்றவை காட்சியில் வைக்கப்பட உள்ளன. இதற்காக அரிய பொருட்கள் சென்னை மற்றும் 23 மாவட்ட அருங்காட்சியகங்களில் இருந்து திரட்டப்பட உள்ளது. இதில் பொதுமக்களின் பங்களிப்பு என்பது மகத்தானது.

அந்த வகையில் அருங்காட்சியகத்திற்கு நாமக்கல் இராமலிங்கம் அவர்களின் வாரிசான முனைவர் பழனியப்பன் அவர்கள், நாமக்கல் கவிஞர் அவர்கள் பயன்படுத்திய பல அரிய பொருட்களை குறிப்பாக அவரது ஆடைகள், அவர் பயன்படுத்திய கேமரா, மின் விசிறி மரப்பெட்டிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை இந்த அருங்காட்சியகத்திற்கு நன்கொடையாக வழங்கி இருக்கிறார்கள். அவற்றில் அவர் வழங்கிய அரிய பொருட்களான வெள்ளியிலான பேழையில் உள்ள பட்டயம் வரலாற்று சிறப்பு வாய்ந்தது.

சென்னை நகர சபையினரால் 1945–ஆம் ஆண்டு நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்களுக்கு வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்ட பட்டுத் துணியிலான வாழ்த்துப் பட்டயத்தை வழங்கினார்கள். இந்த வெள்ளிப் பேழையை இத்தனை ஆண்டுகள் பாதுகாத்து வந்த கவிஞர் இராமலிங்கம் அவர்களின் பேரன் முனைவர் பழனியப்பன் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களிடம் 18.07.2024 அன்று, சென்னை சேப்பாக்கம் ஹுமாயூன் மஹாலில் புதியதாக அமையவுள்ள சுதந்திர தின அருங்காட்சியகத்திற்கு வழங்கிடும் விதமாக வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, அரசு முதன்மை செயலாளர், முனைவர் பி. சந்திரமோகன், இ.ஆ.ப., அருங்காட்சியகத்தின் ஆணையர், திரு மா. அரவிந்த், இ.ஆ.ப மற்றும் அருங்காட்சியத் துறையின் உதவி இயக்குனர்கள் மற்றும் அலுவலர்கள் பங்கேற்றனர். மேலும், பாவலர் நாமக்கல் இரா.அ.பழனியப்பன், கண்மணி பழனியப்பன், நடராஜன் அனுமந்நன், பாண்டியன் அனுமந்தன் ஆகிய நாமக்கல் கவிஞர் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

ஆணையர்(மு.கூ.பொ)
அருங்காட்சியகங்கள் துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu